www.tamilarangam.net

# முடிவு எப்போது ?

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரம்.

வழமை போல தனது புத்தகக்கடையில் வீட்டுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்கிவந்து வைத்துவிட்டு வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்தார் அவர். சில நிமிடங்களில் ஆயுதமேந்திய சில புலிவீரர்கள் சைக்கிளில் வந்து குதித்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருந்த அந்தப் பழையகடைத் தொகுதியிலிருந்த இந்தப் பிரபலமான — ஆனால் முக்கி முனகி இயங்கிக்கொண்டிருந்த — புத்தகக்கடைக்குள் அவர்கள் நுழைந்தனர்.

புத்தகங்களை விற்பது ஒரு பணம் தரும் வியாபாரமாக இருந்த முன்னைநாள் யாழ்ப்பாணம் அல்ல இது இன்று. புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக அழவேண்டியது ஒருபுறம். இந்தக் குறிப்பிட்ட கடையின் புத்தகங்களைப் படிப்பது தேசத் துரோகமாகக் கருதப் படுமோ என்ற அச்சம் மறுபுறமுமாக புத்தகங்கள் விலைபோகாத ஒரு புத்தகக்கடையாக அது மாறி விட்டது.

அந்தப் புத்தகக் கடைதான் "யாழ் புக் கவுஸ்".

நுழைந்தவர்கள் புத்தகங்கள் படிப்பதற்கே என்பதை அறியாதவர்கள் என்பதால் விடயம் வேறு என்பது வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்த அவருக்குத் தெரிந்திருந்தது.

சீன உளவாளி என்றும் இன்னோரன்ன வேறு அடைமொழிகளாலும் அழைக்கப்பட்ட முன்னைநாள் கொம்யூனிஸ்ட் கட்சியின், உறுதி குலையாத ஒரு கொம்யூனிஸ்ட் அவர். தேசத்தினதும், மக்களினதும் விடுதலையில் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருந்தபோதும் நடைமுறையிலுள்ள 'அரசியற் பாதையில் நம்பிக்கை அற்றிருந்த' காரணத்தால் 'துரோகிகளில் ஒருவராக இருக்கக்கூடுமோ' என வழமைபோல அநியாயமாகச் சந்தேகிக்கப்பட்டவர் அவர்.

அவர் வேறு யாருமல்ல.

அறுபதுகளில் தீவிர கொம்யூனிஸ்ட்டும், போராளி பத்திரிகையின் முந்நாள் ஆசிரியரும், எழுபதுகளிலும், எண்பதுகளிலும் பலராலும் மதிக்கப்பட்ட அறிவாளிகளில் ஒருவருமான மணியண்ணை தான் அவர்.

மாற்றுக் கருத்தாளரையும் மதிக்கத் தெரிந்த பண்பாளரான அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. ஒன்றரை வயதான பெண் குழந்தைக்குத் தகப்பனான அவர் தனது குடும்பத்தின் நிலை பற்றி எடுத்துக் கூறியது எப்போதும் போலவே புலிகளுக்குக் கேட்கவில்லை.

அறுபதுகளில் அரசியற் காரணங்களுக்காக பல்கலைக்கழகப் படிப்பை உதறிவிட்டு முழுநேர கொம்யூனிஸ்ட்டுக் கட்சி(மா-லெ) உறுப்பினராகிய மணியண்ணை தொழிலாள விவசாயிகளின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணிக்க எந்நேரமும் தயாராக இருந்த ஒரு தேசபக்தன்.

"விசாரணை"க்காக புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மணியண்ணை எதிர்பார்த்ததுபோலவே இன்று வரை விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் இனவெறி அரசு, இந்திய மேலாதிக்கம் என்பவற்றை உறுதியாக எதிர்த்த அவர் மக்களின் சனனாயகம், விடுதலை என்பவற்றின் அவசியம் தேசவிடுதலைக்கு ஒரு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் என்பது மட்டுமே அவரது "துரோகம்".

அண்மைக்கால கைதுகளான கேசவன் முதல் செல்வி, தில்லைநாதன் வரையான கைதுகளில் இவர் பதின் மூன்றாவது நபர்.

கடத்தப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிப்பது அவசியம் என்ற அம்சம் புலிகளின் அகராதியில் ஒருபோதும் இல்லை.

மனிதர்களது சிந்தனைகளை நசுக்கி தாம் நினைப்பதைப் பேசுவதே தேசபக்தி என்று சாதிக்கும் "விடுதலை"ப்புலிகளது போராட்டம் தேடித் தந்திருப்பது அராஜகத்திற்கும், அடக்குமுறைக்கும், மனிதப் படுகொலைகளுக்குமான சுதந்திரத்தையே.

தேசத்தின் வாயை மூடிவிட நினைக்கும் புலிகளுக்கு ஒரு வார்த்தை: இதை முடிப்பதற்கு உள்ள ஒரே வழி முழுத் தேசத்தின் மக்களையுமே கொன்றுவிடுவதுதான்! அதைச் செய்யுங்கள். பின்னர் மனிதர்கள் இல்லாத தேசத்தில் புலிகள் மட்டுமே உறுமும் விடுதலை வாங்கித் தந்த பெருமை உங்களுக்குச் சேரும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களே...

கேசவன்... செல்வி... தில்லை... வரிசையில் இன்று புதிதாக மணியண்ணை. இன்னும் எத்தனை பேரோ? இந்த மனிதப் படுகொலைகளுக்கு முடிவுகட்டுவது எல்லோரும் அழிந்த பின்பா?

— நண்பர்கள் (ஈழம்)

---

எந்நேரத்திலும் கொல்லப்படக்கூடிய சூழலிலிருந்து வரும் இப் பிரசுரத்தை இயன்றவரை எல்லோருக்கும் கிடைக்கச் செய்யுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்